**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்**

**குளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல் முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : திரு G.செல்வராஜ்.B.A**

எண்.2/2024/ம.பி/கு.ஊ. நாள்: 29.02.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் -ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி வட்டம்- மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் - குளூர் ஊராட்சி - துய்யம்பூந்துறை "இ" வருவாய் கிராமம் ரீ.ச.எண்.1285/ 2-ல் 0.72 ஏக்கர் அல்லது 2900.00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது உள்ளாட்சி துறையால் மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் சார்பாக..

பார்வை :

1. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ.4(3)த்துறை நாள் : 04.05.2017
2. அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ.4(3)த்துறை நாள் : 09.12.2020
3. அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ.4(3)த்துறை நாள் : 04.06.2004
4. அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ.4(3)த்துறை நாள் : 23.9.2020 (ம) 16.07.2022
5. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை, நாள்.31.01.2020
6. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 30.08.2017
7. நகர் ஊரமைப்பு துணை ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:13686/2017/LA1 நாள் : 08.09.2017
8. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:320/2022/TCP3 நாள் : 07.01.2022
9. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:4367/2019/TCP2 நாள் : 14.08.2021
10. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்கள் கடிதம் எண்.அ4/5921/2023 (56) நாள்.09.08.2023
11. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்களின் ந.க.எண்: HDRT4DAQ/2023/TCP நாள் : 27.09.2023
12. குளூர் ஊராட்சி மன்ற தீர்மான எண். 33 நாள். 24.01.2024
13. தமிழ்நாடு அரசு பதிவுத்துறை இணையதள விபரம் நாள். 20.12.2023
14. தலைவர் குளூர் ஊராட்சி கடிதம் நாள்.20.12.2023
15. திரு.M.செல்வராஜ், 25/9 வெட்டுகாட்டுவலசு, கலக்ரேட் ஈரோடு - 638011 என்பவரது விண்ணப்பம் நாள்.28.02.2024

*****

ஆணை:-

பார்வை (1) முதல் (5) வரை உள்ள அரசாணைகளை பின்பற்றியும், பார்வை (6) முதல் (10) வரை உள்ள அரசு கடிதங்கள் மற்றும் இதரதுறை அலுவலர்களால் வழங்கப்பட்ட தெளிவுரைகள் மற்றும் அனுமதிகளை தொடர்ந்து, பார்வை (11) இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதத்தில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், குளூர் ஊராட்சி துய்யம்பூந்துறை "இ" வருவாய் கிராமம்

Scanned with OKEN Scanner

ரீ.ச.எண்.1285/ 2-ல் 0.72 ஏக்கர் அல்லது 2900.00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.401/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கியும் வரைபடம் அங்கீகரித்தும் உள்ளாட்சி அமைப்புகளால் திட்டமில்லா மனைப்பகுதில் அமையும் மனைப்பிரிவிற்கு பார்வை (1) இல் காணும் அரசாணையின் விதி 3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- வீதமும், விதி (9)-ன் படி நிலத்திற்கான சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக மனுதாரரால் உரிய அரசுக் கணக்கில் செலுத்திய பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கவேண்டும் என தெரிவித்து ஆணைவழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் (மூலை முடுக்குகள் உட்பட) பொது உபயோகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) இடம், பூங்கா ஆகியவற்றினை தான பத்திர வாயிலாக பத்திர பதிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய தெரிவிக்கப்பட்டதை அடுத்து 10% பூங்கா நிலம் 193.53. ச.மீ பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.43544/-ஐ உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தியுள்ளார். மேலும் மனைபிரிவில் அமைந்துள்ள சாலைகள் 964.70 ச.மீ (மூலை முடுக்குகள் உட்பட) பொது உபயோகம் 12.75. ச.மீ அவல்பூந்துறை சார் பதிவாளர் அலுவலக தானசாசன ஆவண பதிவு எண் 7129/2023 நாள்.01.09.2023- ன் படி குளூர் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார். 23.31 ச.மீ இடம் தானசாசன ஆவண பதிவு எண் 7128/2023 நாள்.01.09.2023- ன் படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO)-க்கு தான மாக ஒப்படைப்பு செய்துள்ளார்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டவாறு நிலபயன் மாற்ற கட்டணம் வசூலிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்டம், துய்யம்பூந்துறை "இ" வருவாய் கிராமம் ரீ.ச.எண்.1285/ 2-ல் உள்ள நிலத்திற்கான சந்தை மதிப்பு பார்வை (13) காணும் தமிழ்நாடு அரசு பதிவு துறை இணையதளவாயிலக அறிக்கை பெறப்பட்டது.

பதிவு துறை இணையதள விவரப்படி துய்யம்பூந்துறை "இ" வருவாய் கிராமம் ரீ.ச.எண்.1285/ 2-ல் உள்ள நிலத்திற்கான சந்தை மதிப்பு ஏக்கர் ஒன்றிக்கு ரூ.850000/-என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மனுதாரருக்கு தெரிவித்து பார்வை (14)-ல் காணும் கடிதவாயிலாக நில பயன்மாற்ற கட்டணம் 3% - தொகையினை உரிய அரசு கணக்கில் செலுத்தியும் கூராய்வு கட்டணம் ரூ.1000/- வீதம் குளூர் ஊராட்சியில் செலுத்தி அசல் சலான்களை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது

பார்வை (15)-ல் காணும் விண்ணப்பத்தில் உத்தேச மனைப்பிரிவுகளுக்கான நில பயன் மாற்ற கட்டணம் ரூ.18360/-ஐ பாரத மாநில வங்கி மொடக்குறிச்சி கிளை E-சலான் எண்.20240229021390 நாள்.29.02.2024-ன் படி செலுத்தியும், கூராய்வு கட்டணம் தலா ரூ.1000/- வீதம் 19 மனைப்பிரிவுகளுக்கு ரூ.19,000/-ஐ குளூர் ஊராட்சி பல்வகை ரசீது எண்.2023/2024/10/2/8/7/9 நாள்.29.02.2024-ன் படி செலுத்தியும் அசல் சலன்களை ஒப்படைத்துள்ளார்.

இறுதி ஒப்புதலுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செலுத்தி உள்ளதால் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், குளூர் ஊராட்சி, துய்யம்பூந்துறை "இ" வருவாய் கிராமம் ரீ.ச.எண்.1285/ 2-ல் 0.72 ஏக்கர் அல்லது 2900 .00ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.401/2013 என எண்ணிடப்பட்டு 27.09.2023 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காணும் 19 (மனை எண்கள் 1 முதல் 19 வரை) (பத்தொன்பது மட்டும்) மனைப்பிரிவுகளுக்கும் பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

மேற்கண்ட மனைப்பிரிவு இடத்திற்க்கு **VTL VILASES** என பெயரிடப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

**நிபந்தனைகள்:-**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண். HDRT4DAQ/2023/TCP நாள் : 27.09.2023 - உத்திரவில் பிறப்பிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளை மீறக்கூடாது.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு நில அளவைகளை உரிய அலுவலர் அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
3. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விதிகளில் வேறுபாடுகள் ஏதேனுமிருந்து கூடுதல் கட்டணம் செலுத்திட தெரிவிக்கும் பட்சத்தில் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
4. பொது உபயோகத்திற்கான சாலைகளில் மின் கம்பங்கள் அமைக்கும் பொழுது ஒரே சீரான வரிசைக்கிரமமாக அமைத்தல் வேண்டும்.
5. மின்வாரிய உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே மின் மாற்றிகள் (டிரான்பாரங்கள்) அமைக்க வேண்டும் சாலைகளில் அமைக்க அனுமதி இல்லை.
6. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளுக்கு ஊராட்சியில் கட்டிட அனுமதி கோரும் போது மனை எண் 9 முதல் 13 வரை உள்ள மனைப்பிரிவில் தடை செய்யப்பட்ட பகுதி தவிர்த்து வீடு கட்ட அனுமதிபெற்று கட்டிடங்கள் கட்ட வேண்டும். அபாயகரமான அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் எதுவும் அமைத்திட அனுமதியில்லை.
7. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி உள்ளாட்சி அமைப்பிற்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்யவோ, விற்பனை செய்திடவோ கூடாது.
8. ஒவ்வொரு மனைப்பிரிவு பத்திர பதிவிற்கும் மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடல் வேண்டும். அவ்வாறு வரைபடம் இல்லாமல் பத்திர பதிவு செய்யப்படும் ஆவணத்தின் பேரில் வீடு கட்டுவதற்குரிய கட்டிட அனுமதி வழங்கப்படமாட்டது.
9. பத்திரபதிவுகள், நில உடைமை மாற்றம், மனைப்பிரிவு அங்கீகார இறுதி ஒப்புதல் உள்ளிட்ட இனங்களில் எதிர்காலத்தில் நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் தொடரப்பட்டால் அதற்கு மனுதாரரே (தற்போதைய நில உடைமையாளர்) முழு பொறுப்பாவார்.
10. பொது இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வழியாக மேற்பரப்பில் மனுதாரர் விற்பனை செய்யஉள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த/தாழ்வுநிலை அழுத்த மின்சார லைன்கள் அமைத்தல் கூடாது.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இந்த மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அங்கீகாரம் ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

G. Selvaraj 29/02/2024

தலைவர்,
குளூர் ஊராட்சி.

தலைவர்
குளூர் ஊராட்சி.

பெறுதல்:-

திரு.ஆ.செல்வராஜ்,
25/9 வெட்டுக்காட்டு வலசு,
கலக்ரேட்,
ஈரோடு - 638011

eVoice 29.02.24

நகல்:-

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மொடக்குறிச்சி.
3. சார்பதிவாளர்/அவல்பூந்துறை சார் பதிவு அலுவலகம்.
4. வருவாய் வட்டாட்சியர் மொடக்குறிச்சி.
5. ஊராட்சி மன்ற இருப்பு கோப்பிற்கு.

Scanned with OKEN Scanner